2003 மார்ச் 31]

என்பதைத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 142, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

142—

மேம்பாலம்

***19812—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம்-செங்குன்றம் நெடுஞ்சாலை மேற்கு இரயில்வே கடவில் தரைப்பாலம்/மேம்பாலம் இல்லாததால் நெரிசல் மிகுந்த நேரங்களில் போக்குவரத்து பாதிக்கப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வில்லிவாக்கம்-செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம் யார்டு அருகில் இரயில்வே கி.மீ.9/25 முதல் 27 வரை இரயில்வே கடவு எண்-2க்குப் பதிலாகக் கட்டப்பட வேண்டியது மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் ஆகும். இப்பணியை இரயில்வே திட்டப் பணிகளில் சேர்க்க, முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்க இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. நெப்போலியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய பதிலுக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது கடந்த வருடமே இந்தப் பட்டியலில் இடம் பெற்று இருக்கின்றது. வில்லிவாக்கத்தில் இருந்து செங்குன்றம் செல்லும் பாதையில் லெவல் கிராசிங்-2, வில்லிவாக்கத்திலிருந்து பெரம்பூர் செல்லும் பாதையில் லெவல் கிராசிங்-1, இந்த 2 இடங்களுக்கும் பாலம் தேவை என்று பொதுமக்கள் 20 ஆண்டு காலமாகப் போராடி வருகிறார்கள். ஆனால் எந்த நடவடிக்கையையும் மத்திய அரசாங்கமும்,

மாநில அரசாங்கமும் இதுவரை எடுக்காமல் இருந்தன. 2001 கணக்கீட்டின்படி இரயில்வே துறை குறிப்பிட்டுள்ள நிபந்தனையின்படி இரயில்வே இலாகா மூலம் Train Vehicular Unit (TVU) 1 இலட்சம் வாகனங்கள் ஓர் ஆண்டிற்கு அந்த லெவல் கிராசிங்கைக் கடந்தால் R.O.B. or R.U.B.—மேம்பாலமோ அல்லது கீழ்ப் பாலமோ—அமைக்கப்படவேண்டும் என்பது இரயில்வேயின் நியதி. அந்த அடிப்படையில் 2001 கணக்கீட்டைப் பார்த்தோமானால் லெவல் கிராசிங் 1-ல் வாகனங்கள் 10 இலட்சத்தைத் தாண்டிவிட்டன. லெவல் கிராசிங் 2-ல் வாகனங்கள் 12 இலட்சத்தைத் தாண்டிவிட்டன. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2 ஆண்டு காலம் ஆகின்ற நிலையில் வாகனங்கள் 14 இலட்சத்தைத் தாண்டிவிடக் கூடிய நிலை உள்ளது. இப்படி இருக்கும்போது, நான் பல்வேறு அதிகாரிகளைச் சந்தித்து மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இன்றைக்கு மத்திய அரசாங்கமும் நிதி ஒதுக்கும் நிலைமைக்கு வந்துள்ளது.

50 சதவிகிதம் மத்திய அரசாங்கமும், 50 சதவிகிதம் மாநில அரசாங்கமும் நிதி ஒதுக்க வேண்டும். இதற்கு மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்க இப்போது தயாரான நிலையில் உள்ளது. ஆனால் மாநில அரசாங்கம் சென்றமுறை பட்டியலில் 5-வது இடத்திலும், 6-வது இடத்திலும் announce செய்து, இன்றுவரை எந்தச் செயல்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்து, உடனடியாக அதற்கான நிதியை ஒதுக்கிட மாநில அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரால் குறிப்பிடப்பட்டுள்ள இடமான வில்லிவாக்கம்-செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம் யார்டு அருகில் இரயில்வே கி.மீ.9/25 முதல் 27 வரை இரயில்வே கடவு எண் 2-க்குப் பதிலாகக் கட்டப்பட வேண்டியது மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் ஆகும். மேற்கண்ட இடமானது சென்னை மாநகராட்சியைச் சேர்ந்தது. இவ்விடத்தில் மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைக்கும் பணி 2001-02 ஆம் ஆண்டு இரயில்வே திட்டப் பணியில் சேர்க்க இரயில்வே துறை அனுப்பியுள்ள 97 இரயில்வே மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலப் பணிகளில் வரிசை எண் 6-ல் இடம் பெற்றுள்ளது. இப்பணிக்கான தனி வரைபடம் மற்ற விவரங்கள் சென்னை

2003 மார்ச் 31]

மாநகராட்சியால் 2-4-2002-இல் இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் இப்பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. து. நெப்போலியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 50 சதவிகித நிதி ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராக உள்ளது. ஒரு மேம்பாலத்திற்கு 8 கோடி ரூபாய் என்ற அளவில் இரண்டு மேம்பாலங்களுக்கும் 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய பங்கீடு 8 கோடி ரூபாய். அதை ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறது. C.M.D.A.விலிருந்து அந்தக் கடிதம் சென்று விட்டது. ஆனால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நெப்போலியன், தயாராக இருக்கிறது என்றால் அமைச்சருக்குத் தகவல் சொல்லிச் சொல்லுங்கள், மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கு.

திரு. து. நெப்போலியன்: மாநில அரசுதான் கேட்டுப்பெறவேண்டும். மாநில அரசு, கூடிய விரைவில் அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அது எப்போது நடைபெறும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பாலப் பணியின் அவசர, அவசியத்தைக் கருதி, மத்திய இரயில்வே துறைக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அங்கிருந்து ஒப்புதல் கிடைத்தவுடன் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

143—

நீதிமன்றக் கட்டடம்

***3630—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—